# AUXILIUM COLLEGE OF ARTS AND SCIENCE FOR WOMEN

**Affiliated to Bharathidasan University, Tiruchirappalli -24**

**Managed by Salesian Sisters, Trichy**

**Regunathapuram (Po) Karambakudi (Tk) Pudukkottai (Dt) – 622302**

## 2016- 2017 ஆம் ஆண்டிற்கான நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம்

## 2016 - 2017 முகாமின் மையக்கருத்து

### உடல் நலம், பொது சுகாதாரம் மற்றும் தனிநபர் ஆரோக்கியம்

(ர்நயடவா. ூரடிடளைஉஇ ளயமெைவயவழைெ யனெ 'நசளழயெட ாரபநைநெ)

பாரதிதாசன் பல்கலைக்கழகமும், அக்ஸீலியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் இணைந்து நடத்திய நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாமானது 20-01-2017 முதல் 26-01-2017 வரை 7 நாட்கள் புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், பந்துவக்கோட்டை ஊராட்சியில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

**முகாமின் முதல்நாள் 20-1-2017**அன்று முகாம் துவக்க விழாவானது பந்துவக்கோட்டை முன்னால் ஊராட்சி மன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் எம் கல்லூரியின் தாளாளர் அருட் சகோதரி. சிறியபு'பம், எம் கல்லூரியின் முதல்வர் அருட். சகோதரி செல்வராணி அவர்கள், தலைமை ஆசிரியர் முன்னிலையில் குத்துவிளக்கு ஏற்றப்பட்டு முகாமானது சிறப்பாக துவக்கி வைக்கப்பட்டது. பின்னர், கவிஞர் எம்.ஸ்டாலின் சரவணன் மாவட்டப் பொருளாளர். தமுஎகச அவர்கள் காலநிலை மாற்றமும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மக்களுக்கு சிறப்பு சொற்பொழிவாற்றினார்.[redacted] சொற்பொழிவாற்றினார்.[redacted] சிறப்பு சொற்பொழிவாற்றினார்.








இரண்டாம் நாள் 21-01-2017 அன்றுளம் கல்லூரியின் முதல்வர் முனைவர் அருட்சகோதரி செல்வராணி அவர்களால பந்துவக்கோட்டை அரசினா் உயா்நிலைப்பள்ளி மற்றும் ஊராட்சி தொடக்கப்பள்ளி வளாகம் தூய்மைப்படுத்தப்பட்டது திருமதி.பு்'பம் ஆரம்ப சுகாதார நிலைய ஆலோசகர் (எச். .வி) மழையூர் எய்ட்ஸ் நோய் அறிகுறி பரவும் முறை மற்றும் தடுப்பதற்கான வழி முறைகளையும் பற்றி சிறப்பு சொற்பொழிவாற்றினாா். பின்னா் மாணவிகள், விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பாடல்கள், நாடகங்கள் நடித்துக் காட்டினார்கள்.






மூன்றாம் நாள் 22-01-2017 அன்று ஊராட்சி மன்ற வளாகம் மற்றும் அங்கன்வாடி மையம் சுத்தம் செய்தல் பணி துவங்கப்பெற்றது. பின்னர் 2.00 மணியளவில் திருமதி ஏ.ஆர்த்தி பேராசிரிரியை அவர்கள் நுகர்வோர் உரிமைகள் மற்றும் கடமைகள எனும் தலைப்பில் மக்களுக்கு பயன் உள்ள வகையில் அறிய பல கருத்துக்களை சிறப்புற விளக்கினார்





நான்காம் நாள் 23-01-2017 அன்று எம் மாணவிகளால் கோவில் வளாகம் தூய்மை செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து கண் மருத்துவ முகாம் மற்றும் இரத்த வகை அறிதல் சிறப்பு முகாமானது நடைபெற்றது.இம்முகாமில் இரத்ததானம் செய்வதன் அவசியம் குறித்த கருத்துக்களை டாக்டர்.ராஜ்குமார் (வாசன் கண் மருத்துவமனை. தஞ்சாவூர்) அவர்கள் சிறப்பு சொற்பொழிவாற்றினார்.




LIONS CLUB
THANJAVUR
RAAJA RAAJA
vasan eye care
AUX
ARTS


AUXILIUM COLLEGE OF
ARTS & SCIENCE FOR WOMEN
REGUNATHAPURAM
NATIONAL SERVICE SCHEM



ஐந்தாம் நாள் 24-01-2017 அன்று சாலை செப்பணிடுதல் பணி நடைபெற்றது. காலை 10.00 மணியளவில் மரம் நடும் விழாவானது மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பெருவாரியான மரக்கன்றுகளை எம் கல்லூரியின் முதல்வர் அருட். சகோ. டாக்டர் செல்வராணி முன்னிலயில் பந்துவக்கோட்டை ஊர்ப் பொது இடங்களிலும், கோவில் வளாகம்,அரசினர் உயர்நிலைப்பள்ளி வளாகம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி வளாகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், அஞ்சலகம், அங்கன்வாடிமையம், அங்காடி, நீர்த்தேக்கக்கரை மற்றும் சாலை ஓரங்களிலும், எம் கல்லூரி வளாகத்திலும் மரக்கன்றுகளை நட்டுவைத்து அனைவரும் மகிழ்ந்தனர். பின்னர் உணவே மருந்து என்ற தலைப்பில் திருமதி.டாக்டர். பார்வதி (பசுமை இயற்கை அங்காடி. துவரங்குறிச்சி) அவர்கள் பாரம்பரிய இயற்கை உணவின் அவசியம் பற்றியும். இயற்கை மூலிகைகளின் நன்மை குறித்தும் விளக்கியது அனைவருக்கும் பயன் உள்ள வகையில் அமைந்தது.




UXILIUM COLLEGE OF
& SCIENCE FOR WOMEN
REGUNATHAPURAM
IONAL SERVICE SCHEME


AUXILIUM COLLEGE



ஆறாம் நாள் 25-01-2017அன்று கடைவீதிகள் தூய்மைப்படுத்தப்பட்டது. மாலை 4 மணியளவில். மருத்துவ ஒருங்கிணைப்பாளர் உயர்திரு.கார்த்திக்அவர்கள் மன நோய் என்றால் என்ன மனநோயின் அறிகுறி அதற்குரிய தீர்வு குறித்த அறிய பல கருத்துக்களை ஊர்ப் பொது மக்கள் மற்றும் மாணவ மாணவியர் பயன் பெறும் வகையில் விளக்கினார்.



## முகாம் நிறைவு விழா

முகாமின் நிறைவு நாளான வியாழக்கிழமை 26-01-2017 குடியரசு தினமான அன்று காலை 7.00 மணியளவில குடியரசு தின விழாவானது பந்துவக்கோட்டை அரசினா் உயா்நிலைப் பள்ளி வளாகத்தில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவினை சிறப்பிதது சிறப்புரையாற்ற பள்ளியின் தலைமை ஆசிரியா் எஸ்.சவரிநாதன் மற்றும் பெற்றோா் ஆசிரிய கழக தலைவா் அவா்கள் வருகை தந்தனா். நமது ஜனநாயகத்தின் உண்மைநிலையினையும் குடியரசு நாட்டிற்க்கு மாணவ மாணவியா்கள் ஆற்ற வேண்டிய கடமையினையும் எடுத்துரைத்தாா். மேலும் தேசிய ஒருமைப்பாட்டை நிலைநாட்டும் வகையில் எம் மாணவிகளின் பேச்சுத்திறன் பாடல் நடனம் அரங்கேர விழா இனிதே நிறைவுற்றது.







XILIUM COLLEGE OF
G & SCIENCE FOR WOMEN
REGUNATHAPURAM
NAL SERVICE SCHEME
இரத்ததானம்